BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

An international open access, peer- reviewed, refereed journal

# சங்க இலக்கியத்தில் வாழ்வியல் ஓர் ஆய்வு
# Sanga Ilakkiyaththil vaazhviyal oar aayvu

முனைவர் சு. இளவரசி

உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, ஜமால் முகமது கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 620 020, தமிழ்நாடு, இந்தியா

Dr. S. Ilavarasi

Assistant professor, Department of Tamil, Jamal Mohammed college, Tiruchirappalli - 620 020, Tamilnadu, India,

E. Mail: ilavarasisubbaiah@gmail.com

Abstract

In the Union Summary Sangam, the concentrated lives of Tamil literature through Tamil literature. Ancient Tamils will vide human life from the chariot, the prophylacticism, the prophesy, the dozen, the prophylaxis, the lack of pregnancy, discipline, Egypt, hospitality, household. We will show us the life of the day. They are divided into two categories as the alphabet and yard. Ahm is romantic, family dependent. The yard depends on the valiant, donor and regime. The union literature is the culture and civilization and the rare repositories. We know the information about the lifestyle of the Tamils and advocate the protocols to live.

Key words:

Love, Hospitality, Domestic, Life, Charity

**ஆய்வுச் சுருக்கம்**

சங்க காலத்தில் தமிழ் இலக்கியங்கள் வழியாக மனித இனத்துக்கு வழங்கிய செறிவார்ந்த வாழ்வியல் நெறிகளைவிளக்குகின்றன. பண்டையத் தமிழர்கள் வாழ்வியல் கடைபிடிக்கத் தொழுகிய வாய்மை, செய்நன்றி அறிதல், நடுவுநிலைமை,அடக்கம் உடைமை, ஒழுக்கம், ஈகை, விருந்தோம்பல், இல்லற மாண்பு போன்ற அறம் சார் நெறிகளிலிருந்து மனித வாழ்வு வழுவிச் செய்கின்றது. அக்கால மனிதர்களின் வாழ்வியல் அறங்களை நமக்குக் காட்டுகின்றன. அவை அகம் மற்றும் புறம் என இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. அகம் காதல்,குடும்பம் சார்ந்தது. புறம் வீரம், கொடை, ஆட்சி சார்ந்தது.சங்க இலக்கியங்கள் பண்பாட்டையும்,நாகரீகத்தையும் அள்ளித்தரும் அரிய களஞ்சியங்கள் ஆகும். பண்டையத் தமிழர்களின் வாழ்க்கை முறைகளை குறித்து தகவல்களை நாம் அறிந்து கொள்ள செய்வதோடு மக்கள் வாழ வேண்டிய நெறிமுறைகளையும் அறிவுறுத்துவதாக இலக்கியங்கள்அமைகின்றன.

**குறிச் சொற்கள்:**

அன்பு, விருந்தோம்பல், இல்லறம், ஈகை

## முன்னுரை

சங்க இலக்கியங்கள் அக்கால மனிதர்களின் வாழ்வியல் அறங்களை நமக்கு காட்டுகின்றன. அவை அகம் மற்றும் புறம் என இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. அகம் காதல் குடும்பம் சார்ந்தது.புறம் வீரம் கொடை ஆட்சி சார்ந்தது.சங்க இலக்கியங்களில் அறங்கள் நேரடியாக வலியுறுத்தப் படவில்லை என்றாலும் பாடல்களில் வரும் கருத்துக்கள் மூலம் அறநெறிகளை உணர்த்தப்படுகின்றன. தமிழர் பொருள் ஈட்டி அறம் செய்து இன்புற்றனர்.

இல்வாழ்க்கையை அறவாழ்க்கையாக கொண்டுள்ளனர். பிற உயிர்கள் மீது அன்பு இல்லாதவர்களுக்கு கொடுக்கும் அறமும் பெற்றிருக்கும் தன்மையும் இல்வாழ்க்கை பயனுள்ள வாழ்வாகக் கருதப்படும். அறநெறி தவறாது வாழ்ந்து மற்றவரையும் வாழவைக்கும் இயல்புடையவர்கள் இல்வாழ்க்கையே தவ வாழ்க்கையை விட சிறந்தது. பண்டைய தமிழ் மக்கள் தனி மனிதனையும் சமுதாயத்தையும் போற்றி வளர்க்கும் ஒழுக்க நெறியாக அறத்தை கருதினர்.

**ஆய்வு நோக்கம்**

வாழ்க்கையின் அடிதாளமாக அமைவது, இல்வாழ்களின் இனிமை, மனிதனின் நற்குணங்களை விளக்குவதே ஆய்வுநோக்கமாகும்.

**சங்க இலத்தில் அறம்**

ஐந்திணைகளை அமைத்து வாழ்க்கைச் சிறப்பே அமைத்தவன் தமிழன். வாழ்வினை காதல், வீரம் என்ற இரு பெரும் பகுப்பிற்குள் அடங்கி வெளிப்படுத்துகிறது. சங்க இலக்கியம் அகப்பொருள் பற்றி சங்க இலக்கியத்தில் பேசும்பொழுது பெண்ணிற்கு சிறப்பிடம் கொடுக்கப்பட்டுள்ளது. புறமாக கருதப்பட்ட வீர வாழ்வில் பெரும் பாங்கினை ஆணுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. ஆதலால் சங்க இலக்கியத்தில் புறப்பொருள் பற்றிய இடங்களில் ஆணின் வீரத்திற்கும் பேரிடம் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த இரு பெரும் பகுப்புகளில் இரண்டற அறம் பேணப்படுகிறது.

*"அறவர் வாழி தோழி மறவர்*
*வேல் என விரிந்த கதுப்பின் தோல"1*

என நற்றினைப்பாடல்வழி விளக்கப்படுகின்றது.

**புறநானூறு போற்றும் அறம்**

பதினெண் மேல்கணக்கு நூல்களை எட்டுத்தொகை, பத்துப்பாட்டு எனக் கூறுவார். அவற்றில் எட்டுத்தொகை நூல்களின் வரிசையில் புறநூலாக இடம் பெறுவது புறநானூறு. இதில் பண்டைத் தமிழகத்தின் அரிய வரலாற்றுத் தொகுப்பு, பண்பாட்டுக் களஞ்சியம், இலக்கியக் கருவூலம், இதனுள் தமிழகத்தின் கோநகரங்கள், துறைமுகங்கள், மலைகள், ஆறுகள், கடற்கரைகள், காடுகள் பற்றிய செய்திகளும், புரவலர்கள், புலவர்களைப் போற்றி அவர்களின் அறிவுரைகளைச் செவிமடுத்து ஒழுகிய சிறப்புக்களும், மன்னர் தம் மாண்பு பற்றிய அரிய குறிப்புகளும் போர்த்தினவுற்று அறமுறை பிறழாது போர்புரிந்து மார்பில் வேலேற்ற மைந்துடைக் காளையின்

வீரப்பெருமைகளும், மூவேந்தரின் குடிமை முதலான பண்புகளும், குறுநில மன்னர்களின் ஆண்மை, ஈகை, ஒப்புரவு முதலான சால்புகளும், களச்சாவுற்ற தம் மைந்தரின் உடல் கண்டு பெருமிதமெய்திய தாயரின் மறக்குணங்களும் பிறவும் மிகவும் அழகுற எடுத்துணர்த்துகின்றன. மேல் எடுத்துரைக்கப்பட்ட அனைத்திலும் "அறம்" என்ற உணர்வு தோய்ந்து காணப்படுவது நாம் அறியத்தக்கது என்பதற்குச் சில சான்றுகள்

இவ்வுலகம் இன்றளவும் நிலையாக அமைவதற்குக் காரணங்கள் எவை என்று வேண்டுவோர்க்கு அறம் செய்வோரும், அறச் சிந்தனையுடையோருமே என்பதனை, கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி,

*"உண்டால் அம்ம, இவ் உலகம் – இந்திரர்*
*அமிழ்தம் இயைவது ஆயினும். இனிது" எனத்*
*தமியர் உண்டலும் இலரே; முனிவு இலர்,*
*துஞ்சலும் இலர்; பிறர் அஞ்சுவது அஞ்சி,*
*புகழ் எனின், உயிரும் கொடுக்குவர், பழி எனின்*
*உலகுடன் பெறினும், கொள்ளலர்; அயர்விலர்;*
*அன்ன மாட்சி அனையர் ஆகி,*
*தமக்க என முயலா நோன் தாள்*
*பிறர்க்கு என முயலுநர் உண்மையானே"2*

என்கிறார்.

**இல்லற வாழ்க்கை**

நம் பண்பாடுகளில் தலைசிறந்து விளங்குவது இல்லற வாழ்க்கையாகும். சமூகத்தில் இன்று வாழ்க்கைக்கு அர்த்தம் புரியாமல் வாழ்ந்து கொண்டிருப்பவர் பலர். ஆனால் சங்க இலக்கியங்களில் வாழ்க்கை என்பதற்கு இலக்கண வகுத்து கொடுக்கின்றனர். ஒரு ஆடையை பகுத்துஉடுத்தும் வறுமை நிலையிலும் மனம் ஒன்றி வாழும் வாழ்க்கை சிறப்பினை எடுத்துரைக்கின்றது. மனம் ஒத்த அன்பே இல்லற வாழ்க்கையின் அடிப்படையாகும். இதனால் தான்

*"அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு*
*என்புதோல் போர்த்த உடம்பு"3*

என்ற குறளில் வள்ளுவர் அன்பின் நிலையை விளக்குகிறார். கணவனும் மனைவியும் ஒற்றுமையோடு இறுதிவரை வாழ்ந்தால் வீடு பேறு தானாக வந்த இயலும் என்பது தமிழரின் கொள்கையாக இருந்தது. ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து வாழும் வாழ்க்கை தான் அன்பு கலந்த வாழ்க்கை. கணவன் தன்னைவிட அறிவும் மதிப்பும் பெருமையும் அதிகமாக கொண்டிருக்க வேண்டும்.அதனால் தன்னிடத்தில் அன்பு வைத்திருக்க வேண்டும் என்பதே மனைவி விரும்புவாள். இதனை,

*"இம்மை மாறிஸமறுமை ஆயினும்*
*நீ யாகியர் எம் கணவனை*
*யான் ஆகியர் நின் நெஞ்சு நேர்பவனே"4*

என்ற பாடல் வரிகள் இப்பிறவி நீங்கி மறுபிறவியிலும் நீரே என் கணவராக வரவேண்டும் அப்போதும் உன் நெஞ்சத்தில் நான் முதன்மையாக இடம் பெற வேண்டும் என்று கூறுகையில் மனைவி கணவன் தன் மீது மிகுந்த அன்பு கொண்டிருக்க வேண்டும் என ஏங்குவது நமக்கு புலனாகிறது.

**ஈகை**

பொருள் ஈட்டினா னால் மட்டும் போதாது ஈட்டிய செல்வத்தை பிறருக்கு கொடுத்து வாழ்தல் வேண்டும். பெருஞ்செல்வத்தை உடையவன் அதனை தக்கவார்க்கு கொடுத்தல் வேண்டும். பொருள் உடையவருக்கு கொடுப்பதில் எவ்வித பயணம் இல்லை.

*"முட்டில் பெரும் பொருள் ஆக்கியக்கால் மற்றது*
*தக்குழி ஈதல் இனிது"5*

என்ற பாடல் வரிகள் விளக்கப்படுகின்றது உலகில் உள்ள செல்வந்தர்கள் பலரும் செல்வத்தையும் பரிசீலர்க்கு வழங்குவது இன்மையில் புகழும் மறுமையில் துறக்க இன்பமும் பெற வேண்டும் என்று கருத்திலேயாகும்.

**விந்தோம்பல்**

சங்ககால மக்கள்ஈதலையும் விருந்தோம்புதலையும் இரு கண்களாக கருதி அவற்றை வாழ்வில் பின்பற்றி வந்தனர். அவர்கள் அளவிலிருந்து பொருளை வரும் விருந்தினருக்கு ப்பகிர்ந்து கொடுத்து வாழும் இயல்புடையோர்.

*"அல்லிலாயினும் விருந்து வரின் உவக்கும்*
*முல்லைச் சான்ற கற்பின்*
*மெல்லியல் குறுமகள் உறைவின் ஊரே"6*

என்று தலைவன் தன் மனைவியின் விருந்தோம்பல் பாங்கினை நினைத்து உள்ளம் மகிழகிறான்.மேலும் விருந்தினர் உண்டபின் எஞ்சியஉணவையே மகிழ்வுடன் உண்டான். இதனையே

*"விருந்து உண்டு எஞ்சிய மிச்சம் பெருந்தகை*
*நின்னோடு உண்டலும்….."7*

என்ற அடிகள் மூலம் அறியப்பெறுகின்றன.

**அன்புடைமை**

இல்லறத்தில் அன்பு என்பது மிகவும் இன்றியமையாதது. செம்புலத்தில் ஒன்றிய நீர் போல தலைவனும் தலைவியும் தம்முள் மாறாத அன்பு பூண்டு ஒன்றிணைந்து வாழ்ந்தால் இல்லறமானது நல்லறமாகும் என்பதை

*"செம்புலப் பெயல் நீர்போல*
*அன்புடை நெஞ்சந் தாங்கலந்தனவே….."8*

என்ற பாடல் அடிகள் உணர்த்துகின்றன. மனையிலேயே இருக்கக்கூடிய மகளிர்க்கு ஆடவரே உயிர். தலைவன் தலைவி இருவர் மட்டும் உள்ள அன்பும் உறவும் பிறவி தோறும் தொடரவேண்டும்என்பது தலைவியின் விருப்பமாகும்.

**பிறனில் விழையாமை**

பிறனுடைய மனைவியை விரும்பாமையே பிறன் இல் இல்லானை இங்குச்சுட்டுகின்றது. பிறன் மனைவியை விரும்பாதவர்களின் சிறப்பும், பிறன் மனைவியை விரும்பாதவர்களின் இழிவும் பற்றி வள்ளுர் பல கருத்துகளை வழங்கியுள்ளார்.

*"எணைத்துணையர் ஆயினும் எனனாம்*
*தினைத்துணையும்*
*தேரான் பிறனில் புகல் "9*

என்ற குறள் வழி விளக்குகின்றது. எவ்வளவு பெருமையுடையவனாக இருந்தாலும் சிறிதும் ஆராய்ந்து பார்க்காமல் பிறர் மனைவியை விரும்புதல் என்ற தீய செயலைச் செய்யும் ஒருவனது பெருமைகளால் எந்தவிதப் பயனும் இல்லை என்கிறார்.

இலக்கியம் காட்டும் அறம்:

தமிழரின் தாய்ப்பாலாய் விளங்கும் முப்பால் அறம், பொருள், இன்பம் பற்றிப் பாடப்பட்டது. அறநூல்கள் மனிதனை நல்வழிப்படுத்தவே எழுதப்பட்டன. கொடையும்.

தயையும் பிறவிக்குணம் என்கிறார் ஔவையார். அவருக்கு நெல்லிக்கனி ஈந்த அதியனோடு சேர்த்து ஏழு வள்ளல்கள் பாரி, ஓரி, காரி, ஆய், நள்ளி, பேகன் என நாம் அறிவோம். இரந்து வந்த புலவனுக்குத் தன் தலையையே கொடுக்க வந்த குமண வள்ளலைப் புறநானூறு போற்றுகிறது. ஈன்று புறந்தருதல் என்தலைக்கடனே என்ற புறநானூற்றுப் பாடலில் ஒவ்வொருவரும் அவரவர்தம் கடமைகளைச் சரிவரச் செய்வதே அறம் என்கிறார் புலவர் பொன்முடியார். பரிசில் பெற வந்த புலவர் ஒருவற்கு அரசரின் மகன் தாம் உருட்டி விளையாடும் நடைவண்டியைப் பரிசாய்க் கொடுத்தானாம். இதை நடை கற்குமுன் கொடை கற்றாயே என்று அவர் மெய்சிலிர்த்துப் போற்றுகிறார்.

**போரில் அறம்**

சேர நாடு, சோழநாடு, பாண்டியநாடு என்ற முப்பெரும் பகுப்புகளை உடையது. தமிழ்நாடு அவற்றில் குறுநில மன்னர்களும் வாழ்ந்தனர்.வேந்தர்கள் தங்கள் நாடுகளை விரிவு படுத்துவதால் போர்கள் நடந்தன. வேந்தர்களுக்குள்ளும் குறுநில மன்னர்களோடும் குறுநில மன்னர்களுக்குள்ளும் போர்கள் நடந்தன.

*"ஆவும் ஆநிரைப் பார்ப்பனமாக்களும்*
*பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்*
*தென்புல வாழ்நர்க் கருங்கடனிலுக்கும்*
*பொன்போற் புதல்வர் பெறா அ தீரும்*
*எம்மம்பு கடிவிடுதும் நும் மாண் சேர்மிளென*
*அறத்தாறு நுவலும் பூட்கை"10*

என்ற அடிகள் பகைநாட்டுடன் போர்புரியும் போது அறத்துடன் போர் புரிந்ததைச் சுட்டுகின்றன.

போர் அறம் என்பது வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்து போர் செய்யாமையைக்குறிக்கின்றது. போரின் கொடுமையிலிருந்து பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரை பெறாதவர் ஆகியோருக்கு தீங்கு வராமல் போர் புரிய வேண்டும் என்று ஒரு புறப்பாடல் கூறுகிறது. தம்மை விட வலிமை குறைந்தவரோடு போர் செய்வது கூடாது என்பது ஆவூர் முலங்கிழார் குறிப்பிடுகிறார்.

*"எறியார் எறிதல் யாவணது எறிந்தோர்*
*எதிர்சென்று எறிதலும் செல்லான்"11*

என்ற பாடல் வரிகள் விளக்குகின்றது.

**முடிவுரை**

இக்கட்டுரையானது தமிழர்களின்சங்க இலக்கியங்களின் வாழ்வியல் அற கருத்துக்களை விளக்குகின்றது. இலக்கியத்தில் அன்புடைமை, விருந்தோம்பல், ஈகை, இல்வாழ்க்கை,போரில் அறம் ஆகிய நிலைப்பாடுகளில் அறநிலைகள் பற்றிய ச்செய்திகளை எடுத்துரைத்து உள்ளன. ஒரு மனிதன் வாழ்க்கையில் செல்வந்தராகவும் ஒழுக்க நெறியில், அரசியல்செயல் பாடுகளில் அவன் தன்னை காத்துக் கொள்ளகிறான். நல்ல மனிதராகவும் இயல்புடையதாகவும் அமைவதற்கு அவன் அறச் செயல்பாடுகளில் ஈடுபட வேண்டும். அறநிலை தான் ஒருவனது வாழ்க்கையின் மேன்மையையும், சிறப்பினையும், செல்வந்தருக்கும் அடிப்படையாகத் திகழக்கூடிய ஒன்றாகு சங்க காலத்தில் வாழ்ந்த மக்கள் தமக்கு என்ன சில பண்பாடு நெறிமுறைகளை வளர்த்து வந்தன. இன்றும் நாம் சங்க இலக்கிய வாழ்வியல் கருத்துக்களை எடுத்துக் கொண்டால் அவர்களின் மேன்மையையும் சிறப்பினையும் அறிவதற்கு எய்துவாக அமைகின்றது. இன்றைய சூழலில் சமூகத்தில் மக்கள் அறநிலையில் என்பது இன்று காலம் தாமதமாக உள்ளது. காரணம் மனிதன் செல்வத்தை நோக்கி ஓடுகிறான் அவனின் தன்னைச் சார்ந்தவர்களையும் சுற்றத்தார்களையும் உறவினர்களையும் எவ்வித நோக்கமும் இன்றி கருதாமல் அவன் சுயநல வாழ்க்கையை கருத்தில் கொண்டு வாழ தொடங்குகிறான். இச்சூழல் இன்றி மனிதன் ஒவ்வொருவரும் அறச்செயல்பாடுகள் வாழ்க்கை அமைத்து, இலக்கியத்தைஅறிந்துநம் வாழ்க்கையையும் அமைப்பது இக்காலகட்டத்தின் முக்கிய குறிக்கோளாக அமைகின்றது.

வாழ்க்கையில் இன்பமான வாழ்வை பெறுவதற்கான வழிமுறைகளை நாம் ஒவ்வொருவரும் கையாள்வதே சிறந்த அறமாகும்.

**சான்றென் விளக்கம்**

1. நற்றினை- பாடல்எண்-86
2. புறநானூறு பாடல் எண்-182
3. திருக்குறள் -80
4. குறுந்தொகை
5. இனியவைநற்பது பாடல் எண்-19
6. நற்றினைபாடல் எண்-12
7. குறுந்தொகை-206
8. மேலது-49
9. திருகுறள்-144
10. புறநானூறு -9
11. மேலது-301

**துணைநூற் பட்டியல்**


1. திருக்குறள் மூலமும் உரையும்- மணக்குடவர், நோபல் அச்சியந்திர சாலை, சென்னை, திருவல்லிக்கேணி, பதிப்பு-1925.
2. நற்றிணை - பாலசுப்ரமணியன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிட், 41 பிசிட்கோ இன்டர்நேஷனல் எஸ்டேட், அம்பத்தூர் சென்னை -600098.
3. குறுந்தொகைமூலமும் உரையும் - நச்சினார்கினியர் உரை, தலைவர் ஓலைச்சுவடித்துறை, தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் 1985.
4. இனியவை நாற்பது - பூதம் சேர்த்தனார், மதுரை தமிழ் சங்க முத்திரைச் சாலை, பதிப்பு 1903.
5. புறநானூறு புலியூர்க்கேசிகன், பாரி நிலையம் 184, பிரைவேட், சென்னை- 108, மறுபதிப்பு - 2011.